**ஸொரணாதொட பிரதேச சபை**

**பதுளை மாவட்டம்**

-----------------------------------

1. நிதிக் கூற்றுக்கள்

-----------------------------

1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

----------------------------------------------------

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2016 மார்ச் 21 ஆந் திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2015 ஏப்ரல் 28 ஆந் திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2016 ஜுலை 20 ஆந் திகதி சபைச் செயலாளருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

1.2 அபிப்பிராயம்

---------------------

இவ்வறிக்கையின் 1.3 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் ஏற்படுத்தும் தாக்கங்கள் தவிர, நிதிக் கூற்றுக்களில் 2015 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ஸொரணாதொட பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அவற்றின் நிதிச் செயற்பாடுகளும் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமை ஒன்றினை வெளிப்படுத்துகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்

1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

-------------------------------------------------------------

1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

------------------------------------------

பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்களில் திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு வங்கி மீதி ரூபா 54,813 தொகையினால் குறைவாகக் காட்டப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு கூட்டுத்தொகை ரூபா 57,630 தொகையான ஊழியர் பிணை வைப்பு மீதி நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தியிருக்கவில்லை.

(இ) முன்னைய ஆண்டின் போது கிடைத்திருந்த 167 கல்வணய்ஸ் கொடிக் கம்பங்களின் பெறுமதி ரூபா 211,583 இனை கணக்கீடு செய்திருக்கவில்லை.

(ஈ) முன்னைய ஆண்டின் போது பெற்றிருந்த 03 பல்கரும குடில்களின் பெறுமதியாகிய ரூபா 79,500 தொகையினை கணக்கீடு செய்திருக்கவில்லை.

(உ) மீளாய்வாண்டின் போது சபையின் சொத்துக்களின் அபிவிருத்தி மற்றும் நிர்மாண வேலைகளுக்காக கிடைத்திருந்த ரூபா 433,920 தொகையான செலவுகளை மூலதனப்படுத்தியிருக்கவில்லை.

(ஊ) மீளாய்வாண்டிற்கான நிலுவை முத்திரைக் கட்டண வருமானத்தில் அடங்கியிருந்த முன்னைய ஆண்டுகளுக்கான ரூபா 251,361 தொகையான மிகையாக சிட்டை

இட்டவைகளின் பெறுமதியை திரண்ட நிதியத்திற்கு சீராக்கல் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(எ) மீளாய்வாண்டிற்கான நிலுவை நீதி மன்றத் தண்டப் பண வருமானத்தில் அடங்கியிருந்த முன்னைய ஆண்டுகள் தொடர்பான ரூபா 162,198 இற்கான மிகையாக சிட்டை இடப்பட்டவைகளின் பெறுமதியைத் திரண்ட நிதியத்திற்கு சீராக்கல் செய்திருக்கவில்லை.

(ஏ) உள்நாட்டு கடன்கள் மற்றும் அபிவிருத்தி நிதியத்திற்காக மீளாய்வாண்டின் போது செலுத்தியிருந்த தவணைப் பணங்களில் அடங்கியிருந்த ரூபா 132,364 இற்கான வட்டித் தொகை உள்நாாட்டு கடன்கள் மற்றும் அபிவிருத்தி நிதியக் கணக்கிற்கு வரவு வைக்கப்பட்டிருந்தது.

(ஐ) மீளாய்வாண்டு திசெம்பர் மாதத்திற்கான உள்நாட்டுக் கடன்கள் மற்றும் அபிவிருத்தி நிதியத்தின் கடன் தவணையில் அடங்கியிருந்த ரூபா 65,948 தொகையான வட்டி மூலதனச் செலவு ஒன்றென கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஒ) மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்களில் அடங்கியிருந்த முன்னைய ஆண்டிற்காக நிர்மாணவேலை கடன்கொடுத்தோர் மீதி ரூபா 378,554 தொகையினால் மிகையாகக் காட்டப்பட்டிருந்தது.

(ஓ) 2015 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிர்மாண வேலைக் கடன்கொடுத்தோர் மீதி ரூபா 1,800,271 தொகையினால் மிகையாகக் காட்டப்பட்டிருந்தது.

(ஔ) ரூபா 24,376 தொகையினை முன்னைய ஆண்டில் கணக்காய்வுக் கட்டண மீளாய்வாண்டிற்கான செலவு ஒன்றென கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

1.3.2 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

---------------------------------------------------------------------------------------------

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பெற வேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 22,081,539 தொகையாக காணப்பட்டதுடன், செலுத்த வேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 31,064,652 ஆக இருந்தது.

1.3.3 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

--------------------------------------------------------------

(அ) ரூபா 647,601,410 பெறுமதியான 05 கணக்கு விடயங்கள், பெறுமதிகளுடன் காணப்படும் பட்டோலைகள் மற்றும் வருமான விபரங்கள் சமர்ப்பிக்கப்படாமையினால் கணக்காய்வின் போது திருப்திகரமாக சான்றுறுதி செய்வதற்கு முடியாதிருந்தது.

(ஆ) உள்நாட்டு கடன்கள் மற்றும் அபிவிருத்தி நிதிக் கடனுக்காக வைக்கப்பட்ட ரூபா 3,607,770 தொகையான பாதுகாப்பு பிணை வைப்பினை உள்ளூராட்சி ஆணையாளரின் அங்கீகாரம் இன்றி பெற்றிருந்ததுடன், அவற்றின் செலவுகள் தொடர்கள் கணக்காய்விற்கு உறுதிப்படுத்தப்படவில்லை.

1.3.4 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணக்கமின்மைகள்

கணக்காய்வில் அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் இணக்கமின்மை சந்தர்ப்பங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் தொடர்பு | இணக்கமின்மைகள் |
|---|---|
| (அ) 1987 இன் 15 இலக்க பிரதேச சபை சட்டத்தின் 132(ஓ) மற்றும் (ஔ) | விடயத்திற்கு பொறுப்பான அமைச்சரின் பூர்வாங்க அங்கீகாரத்துடன் மேற்கொள்ளப்பட வேண்டிய எனினும் 13 சந்தர்ப்பங்களில் மேற்கொள்ளப்பட்ட கூட்டுத்தொகை ரூபா 359,085 இற்கான கொடுப்பனவுகளுக்காக அமைச்சரின் பூர்வாங்க அங்கீகாரத்தை ஒன்றினை பெற்றிருக்கவில்லை. |
| (ஆ) இலங்கைக் குடியரசின் நிதிப் பிரமாணங்கள் | |
| (i) நி.பி. 104 | சபையின் கப் வண்டி விபத்துக்குள்ளாகி 16 மாதங்களை விட மிகையான காலம் கடந்துள்ள போதிலும் அது தொடர்பாக விசாரணை மேற்கொள்ளப்பட்டு அறிக்கை ஒன்று சமர்ப்பித்திருக்கவில்லை. |
| (ii) நி.பி. 395(இ) | 2014 திசெம்பர் 31 திகதியின் பின்னர் வங்கி இணக்கக் கூற்றுக்கள் தயாரித்திருக்கவில்லை. |
| (iii) நி.பி. 396 | வழங்கப்பட்ட ஆனால் கொடுப்பனவுக்காக சமர்ப்பிக்கப்படாத 06 மாதங்களை கடந்துள்ள ரூபா 76,746 இற்கான 13 காசோலைகளை வருமானத்திற்கு எடுத்திருக்கவில்லை. |
| (இ) இலங்கை குடியரசின் தாபனக் கோவை XXIV ஆம் அத்தியாயம் 1.6 ஆம் பிரிவு | இடமாற்றம் பெற்றுச்சென்றுள்ள 04 ஊழியர்களிடம் அறவிடப்பட வேண்டிய 06 வருடங்களை விஞ்சிய கூட்டுத்தொகை ரூபா 20,730 தொகைக்கான கடன் மீதி |
| (ஈ) ஊவா உள்ளூராட்சி ஆணையாளரின் 2015 ஜூன் 03 ஆம் திகதிய 12/1/1 ஆம் இலக்க சபைகளின் அதிகாரங்களை சாட்டுதல் தொடர்பாக கடிதத்தின் 02(VII) ஆம் ஏற்பாடு | சபையின் கப் வண்டி வரையறையை மிகைத்து அங்கீகாரம் இன்றி மீளாய்வாண்டின் போது ரூபா 92,179 கூட்டுத்தொகைக்கு எரிபொருள் பெற்றிருந்தது. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்க்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 2015 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 1,704,357 தொகையாக காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 959,242 ஆக இருந்தது.

2.2 வருமான நிருவாகம்

--------------------------------

மாகாண சபையின் பிரதான செயலாளர்களிடம் மற்றும் ஏனைய அதிகாரிகளிடம் 2015 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நீதி மன்றத் தண்டப் பணம் ரூபா 692,343 தொகை மற்றும் முத்திரைக் கட்டணம் ரூபா 1,555,708 தொகையினை அறவிட வேண்டிக் காணப்பட்டது.

3. செயற்பாட்டு மீளாய்வு

-----------------------------------

3.1 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

------------------------------------------------------------

சபையின் கப் வண்டி விபத்துக்குள்ளாகி 16 மாதங்கள் கடந்துள்ள போதிலும் பொறுப்புக் கூற வேண்டிய தரப்பினரை இணங்காணாமல் பதிவு செய்யப்படாத கராஜ் ஒன்றிற்கு ரூபா 1,257,800 செலுத்தி பழுதுபார்க்கப்பட்டிருந்தது.

3.2 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

---------------------------------------------------------------

அங்கீகரிக்கப்பட்டிருந்த பதவியணியினை மிகைத்து நிரந்தர வெளிக்கள தொழிலாளர் மற்றும் சுகாதார தொழிலாளர் 09 பேர் சேவையில் இருக்கும் போது 2015 ஆண்டின் போது பிரதியீட்டு அடிப்படையில் ஊழியர்கள் 07 பேர்களை சேவையில் ஈடுபடுத்தி அதற்காக ரூபா 840,600 தொகையான நாட்சம்பளம் செலுத்தியிருந்தது.

3.3 இனங்காணப்பட்ட நட்டங்கள்

-------------------------------------------------

உள்நாட்டு கடன்கள் மற்றும் அபிவிருத்தி நிதியத்தில் இருந்து பெற்றிருந்த கடனை திருப்பிச் செலுத்தும் போது கடன் நிபந்தனைகளை மீறல் மற்றும் தவணைகளை தாமதித்தல் ஆகிய காரணங்களினால் கடன் தொகையைத் தீர்ப்பதற்காக சபை நிதியத்தில் இருந்து ரூபா 5,102,305 தொகையினை மேலதிகச் செலவு ஒன்று மேற்கொள்வதற்கு நேரிட்டிருந்தது.

3.4 ஒப்பந்த நிருவாகம்

-----------------------------

புஸ்ஸல்லாவ முத்தெட்டுவகும்புற கைப்பிடி பாலம் நிர்மாணிப்பதற்காக ஒப்பந்தக்காரர்களுக்கு 2014 செப்டம்பர் 01 திகதி செலுத்தியிருந்த ரூபா 100,000 முற்பணத் தொகையை தீர்த்திருக்கவில்லை.

4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

-----------------------------------------------------------------

4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

-----------------------------------

மீளாய்வாண்டிற்கான சபையின் பாதீட்டு வருமானம் மற்றும் செலவுகளை கட்டுப்படுத்துவதற்காக பாதீட்டை ஆக்கபூர்வமான கட்டுப்பாட்டு கருவி ஒன்றாக பயன்படுத்தியிருக்கவில்லை.

4.2 வருடாந்த பெறுகைகள் திட்டம்

-----------------------------------------------

மீளாய்வாண்டிற்காக வருடாந்த பெறுகைகள் திட்டம் ஒன்று தயாரித்திருக்கவில்லை.

4.3 உள்ளகக் கணக்காய்வு

--------------------------------

2015 ஆண்டிற்கான உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

4.4 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு செயற்படுத்துதல்

-------------------------------------------------------------------------------------------------

மீளாய்வாண்டிற்காக கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு அமைக்கப்பட்டு செயற்படுத்தியிருக்கவில்லை.

5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

----------------------------------------------------

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகள் தொடர்பாக சபையின் விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) அகக் கட்டுப்பாடு

(இ) வருமான நிருவாகம்

(ஈ) இருப்புக் கட்டுப்பாடு

(உ) வாகனக் கட்டுப்பாடு

(ஊ) ஒப்பந்த நிருவாகம்

(எ) சொத்துக்கள் முகாமைத்துவம்